26.02.2026

O.S.No.166/2021

DW1- வேலுச்சாமி – த/பெ.கிருஷ்ணதேவர்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 26.02.2026

குறுக்கு விசாரணை : ( வாதி தரப்பில்)

1. நான் 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு உறவு முறை இல்லை என்றால் சரிதான்.

2. நான் வழக்கு சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்னர் வில்லங்கத்தை பரிசீலனை செய்தேன் என்றால் செய்தேன்.

3. வில்லங்க சான்றிதழில் நான் கிரையம் பெறுவதற்கு முன்பு 24.02.2003 அன்று வாதி கிரையம் பெற்ற விவரம் துலங்கும் என்றால் சரிதான்.

4. 1 முதல் 6 பிரதிவாதிகள் வாதி மீது வழக்கு தாக்கல் செய்துள்ள விவரத்தை நான் கிரையம் பெறும் போது கூறினார்களா என்றால் இல்லை.

5. வா.சா.ஆ.6 ஆவண சொத்தைப் பொறுத்து எனக்கு 1 முதல் 6 பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.6 ஆவணம் எழுதுவதற்கு யார் தகவல் கூறினார்கள் என்றால் 1 முதல் 6 பிரதிவாதிகள் கூறினார்கள்.

7. வா.சா.ஆ.6 ஆவணத்திற்கு முன் ஆவணத்தை நான் பார்வையிட்டு ஏதேனும் வில்லங்கம் இருக்கிறதா என்று சரிபார்த்தேனா என்றால் இல்லை.

8. வா.சா.ஆ.6 ஆவணத்தில் ஏதேனும் சொத்து சம்மந்தமான ஆவணம் மற்றும் நீதிமன்ற ஆவணம் இணைக்கப்பட்டுள்ளதா என்று தெரியுமா என்றால் தெரியாது.

9. வழக்கு தாக்கல் செய்த பின்னராவது நான் எனது அசல் பத்திரத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

10. வா.சா.ஆ.6 ஆவணத்தில் வேறொரு வழக்கு பற்றிய தீர்ப்பு விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விவரம் இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் தெரியவரும் என்றால் சரிதான். அந்த வழக்கானது கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.446/2006 – வாதி மற்றும் 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கிடைய நடைபெற்றது என்ற விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

11. அந்த வழக்கில் 1ம் பிரதிவாதி தான் இந்த வழக்கு வாதி என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

12. அ.வ.446/2006 வழக்கின் எதிர் வழக்குரை சொத்து தான் வா.சா.ஆ.6 கிரைய சொத்து என்றும் அதே சொத்து தான் இந்த வழக்கின் தபசில் சொத்து என்றால் சரியல்ல.

13. வா.சா.ஆ.6 ஆவணத்தில் பக்கம் எண் 28 ல் புல எண்.149/20 ல் மேல்புறம் 17 சென்ட் மட்டும் அ.வ.446/2006 வழக்கின் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார், 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளதை பார்க்கும் போது புல எண்.149/20–ல் 37 சென்டில் மேல்புறம் 17 சென்ட் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

14. நான் வருவாய் வட்டாட்சியரிடம் என் பெயரில் பட்டா வழங்கக் கோரி மனு கொடுத்தேனா என்றால் இல்லை.

15. எதன் அடிப்படையில் என் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

16. இவ்வழக்கில் வாதி தரப்பில் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தை என் வழக்கறிஞர் எனக்கு தெரிவித்துள்ளார் என்றால் சரிதான்.

17. வாதி தரப்பில் வா.சா.ஆ.2 ஆக அ.வ.446/2006 வழக்கின் நிறைவேற்று மனுவின் உண்மை நகலை ஆவணமாக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் அதன் விவரங்களை என் வழக்கறிஞர் எனக்கு தெரிவிக்கவில்லை.

18. வா.சா.ஆ.2 ஆவணத்தில் சொத்து விவரத்தில் சர்வே எண்.149/20 ல் 37.1/2 சென்டில் மேல்பகுதி 18.3/4 சென்ட் வேண்டும் என தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

19. வா.சா.ஆ.2 ஆவணத்தை பொறுத்த நிறைவேற்று மனுவானது தவறான சொத்து விவரம் உள்ளதால் அதனை மேல்நடத்தாமல் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் எனக்கு தெரியாது.

20. வா.சா.ஆ.3 ன் மூலம் சரியான சொத்து விவரத்தை குறிப்பிட்டு தனியாக ஒரு நிறைவேற்று மனு அ.வ.446/2006 வழக்கை பொறுத்து மனு தாக்கல் செயயப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

21. வா.சா.ஆ.3 ஆவணத்தில் சொத்து விவரத்தில் சர்வே எண்.149/20ல் 37 சென்டில் கீழ்பகுதி 18.3/4 சென்ட் வேண்டும் என தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

22. வா.சா.ஆ.3ல் எதிர் வழக்குரை சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சொத்தை தான் நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.149/20ல் 37 சென்டில் கீழ்புறம் நீங்கலாக மேல்புறம் 17 சென்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் மற்றும் ஒரு சொத்தும் சர்வே எண்ணும் அதில் காண்பிக்கப்பட்டுள்ளது. இந்த சொத்து விவரத்தில் ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை.

( வாதி தரப்பு வழக்கறிஞர் பட்டா மாற்றம் செய்ய விண்ணப்பம் அளிக்காமல் எதன் அடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டது என்பதை பற்றிய விவரம் தெரிந்தால் தான் சாட்சியை விசாரணை செய்ய ஏதுவாக இருக்கும் எனக் கூறி கட்டளை 12 விதி 18 ன் கீழ் மனு அளித்ததால் சாட்சியின் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
தென்காசி